# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.

தொலைபேசி: 044–22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.

**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

முறையீட்டு மனு எண்: 187 (ம) 192 /மா/2018

ஆணை நாள்: 8.7.2019

திரு. எம். ஆறுமுக நயினார்,
சென்னை - 4. – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
தஞ்சாவூர் மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, மைலாப்பூர், சென்னை – 4, வெங்கடேச அக்ரஹாரம் சாலை, எண். 2 என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. ஆறுமுக நயினார் என்பவரது 16.8.2018 நாளிட்ட இரண்டு முறையீட்டு மனுக்கள் 23.8.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, முறையீட்டு மனு எண். 187/2018 மற்றும் முறையீட்டு மனு எண். 192/2018 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுக்களாக பதிவு செய்யப்பட்டு, முறையீட்டு மனுதாரரின் மனுக்கள் மற்றும் ஆவணங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை

பெருநகர சென்னை மாநகராட்சி, மைலாப்பூர், சென்னை – 4, வெங்கடேச அக்ரஹாரம் சாலை, எண். 2 என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. ஆறுமுக நயினார் என்பவர் தனது 16.8.2018 நாளிட்ட இரண்டு முறையீட்டு மனுக்களில் கிரீன்வேப்ஸ் அட்வர்டைசிங் & பப்ளிசிட்டி என்ற தனது நிறுவனம் தஞ்சாவூர் மாநகராட்சியின் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையினை நாளிதழ்களில் 17.4.2017 அன்று விளம்பரம் செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.77,302/- மற்றும் மேற்படி மாநகராட்சியின் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையினை நாளிதழ்களில் 29.2.2016 அன்று விளம்பரம் செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.82,112/- தஞ்சாவூர் மாநகராட்சியால் இதுவரையில் வழங்கப்படாமல் இருந்து வருவதாக முறையிட்டுள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனுக்கள் மீதான அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்க தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவத்தின் 3.9.2018 நாளிட்ட அறிவிப்பாணையின் படி ஆணையிடப்பட்டது. தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையரிடமிருந்து அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

முறையீட்டு மனுதாரர், இம்முறைமன்ற நடுவத்தில் 15.7.2019 அன்று விசாரணைக்கு ஆஜராகி, தனது முறையீட்டு மனுக்கள் மீதான விளக்கத்தினை அளிக்க இம்முறைமன்ற நடுவத்தின் 11.6.2019 நாளிட்ட அழைப்பாணையின்படி ஆணையிடப்பட்டது.

இந்நிலையில், முறையீட்டு மனுதாரர் 26.6.2019 நாளிட்ட தனது கடிதத்தில் தனது நிறுவனத்திற்கு தஞ்சாவூர் மாநகராட்சியால் வழங்கப்படாமல் இருந்து வந்த பட்டியல் தொகை ரூ.82,112/– மற்றும் ரூ.77,302/- தனது வங்கி கணக்கிற்கு 3.10.2018 அன்று E C S மூலம் செலுத்தப்பட்டுவிட்டது என்றும் இந்நிறுவனத்திற்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகை ஏதும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் இம்முறையீட்டு மனு மீதான நடவடிக்கையினை கைவிடலாமென முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 8 ஆம் நாளன்று என்னால் கையெப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வழங்கப்படுகிறது.

–//ஒப்பம்//––

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர் (பொ). 30/7/2019

பெறுநர்

1. திரு. M. ஆறுமுகசாமி அவர்கள்,
Proprietor, Greenways Advertising & Publicity,
நெ. 2, வெங்கடேச அக்ரஹாரம் சாலை,
மைலாப்பூர், சென்னை – 4.

2. ஆணையர்,
தஞ்சாவூர் மாநகராட்சி,
தஞ்சாவூர்.

25/7/19

25/7/19

நகல்

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ.கோ./ உதிரி